உ

சிவமயம்.

# அரிச்சந்திரன்
# ஏத்தப்பாட்டு.



சென்னை சூளை
பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1923. [பை 6.

34, ஆண்டியப்பநாயக்கன் தெரு, சூளை மதராஸ்.

பார்வதி அண்டு கம்பெனி,
நெ. 34, ஆண்டியப்பநாய்க்கன் தெரு, சூளை மதராஸ்.

---

# ரூபாவதி

# சிதம்பரசாமியார்.

(இது ஓர் நூதன துப்பறியும் தமிழ் நாவல்.)

இதில், கதாநாயகியாகிய ரூபாவதியிடமிருக்கும் இரகசிய கடிதத்தை மேகநாதப் பிள்ளை யென்பவன் கைக்கொள்ள எண்ணி, மகாயோகிபோல் நடித்து வஞ்சனைத் தொழில்களையே மேற்கொண்டு திரியும் சிதம்பரசாமியாரின் உதவியினால் அக்கடிதத்தைப்பெற அந்த ரூபாவதியையே விவாகஞ் செய்துகொள்ள முயலுவதும், ஒரு நாள் திடீரென்று ரூபாவதியும் இரகசிய கடிதமும் காணாமற் போவதும், பிறகு துப்பறியும் நாகலிங்கம் சிதம்பர சாமியார் பாதாள அறையில் அநேக கஷ்டங்களை அனுபவிப்பதும், கடைசியில் நாகலிங்கன் சிதம்பர சாமியாரை செங்கற்பட்டிலுள்ள ஒரு ஓட்டலில் கண்டு பிடித்து அவ்வஞ்சகனிடத்திலிருந்த இரகசிய கடிதத்தை வாங்குவதும், சிதம்பர சாமியார் உடனே தற்கொலை புரிந்து கொள்ளுவதும் ஆகிய பற்பல விஷயங்கள் மிகு அருமையாக அமைக்கப்பட்டுள்ளது. இடை இடையே துப்பறியும் நாகலிங்கன் சாமர்த்தியங்கள் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தக் கூடியது. அதிலும், மேற்சொன்ன சம்பவங்களன்றி உடனுக் குடனே மனம் திடுக்கிடக் கூடிய ஆச்சரியகரமான கோரக் கொலைகளும் கோர்ட்டின் விசாரணைத் தீர்ப்புகளும், ரூபாவதி முடிவில் தான் காதலித்த நாயகனையே மணம் புரிவதும், அநேக சம்பாஷணைகளும் பொருந்தியிருப்பது மிகவும் வியக்கத்தக்கதேயாகும். இதன் விலை அணா 0 12 0 0

உ

கடவுள் துணை.

# அரிச்சந்திரன்

# ஏத்தப்பாட்டு.

காப்பு - வெண்பா.

சீராரரிச்சந்திர தீரன்தமிழ்க்கதையை
போரோரெழில்யேற்றம் பேசவே—யோரும்
வேழவிநாயகனுடனே விண்ணோருமேதுதிக்க
வாழவிநாயகனைப் பணிகுவாம்.

பிள்ளையாரேவாரும்
பிழைவராமல்காரும்
மழைவரக்கண்பாரும்
மகாதேவன்மகனே
விக்கினரேவாரும்
சக்கரைக்கற்கண்டு
முக்கனியுந்தேனும்
முள்ளுடன்பிலாக்காய்
முடிச்சுடன்கரும்பு
அதிரசம்வகைகள்
அவல்கட்லைதேங்காய்
அப்பனேவுனக்கு

ஒப்புடன்படைப்பேன்
உன்னைத்தொழுவோர்க்கு
எண்ணுந்துணை செய்வா[ய்]
ஈஸ்வரன்மகனே
(ஒருவதியாலொண்ணு)
ஆரப்பூக்கோயில்
அம்மனைத்தொழுதேன்
அரிச்சந்திரபுராணம்
என்னுலானமாத்திரம்
ஏத்தப்பாட்டாய்பாட
தப்புப்பிழையானல்
சகலரும்பொருப்பீர்

(இருபதியாலொண்ணு)
இந்திருந்தேவர்
ரிஷிகள் முனிவோரும்
கொலுசபையிருந்தார்
தேவேந்திரராஜன்
முனியோரைக்கேட்டார்
பொய்சொல்லாதபேர்கள்
பூலோகத்திலுண்டோ
(முப்பதியாலொண்ணு)
மூதலமரிந்த
முனிவருமுரைத்தார்
அயோத்தியையாளும்
அரிச்சந்திராஜன்
என்னுடையசீஷன்
பொய்யென்றவசனம்
நாவினால்உரையான்
நல்லதுவதிஷ்டர்
அவன்நாவுதப்புனென்று
அவனுடையநெஞ்சை
அரிந்தவன்போல் சொன்
பித்தந்தலைக்கேரி [னய்
பிணத்துகிறுய்போடா
(நாற்பதியாலொண்ணு)
நான்பிணத்தயில்லை
நீயதட்டிசொன்னப்
சந்திரசூரியர்
இவர்கள்தெற்கு வடக்கா
சத்தியந்தவரான் [னல்
என்னுடையசீஷன்
இருவர்முனியோரும்
வாக்குவாதஞ்செய்தார்
(ஐம்பதியாலொண்ணு)
அரிந்தவர்முனிவர்
நாரதரும்வந்தார்
ஒருவருக்கொருவர்
உயித்தியங்கள் வேண்டா
நீங்களிருவரும்சபதம் [ம்
இன்னதென்று சொல்வீர்
சத்தியரிச்சந்திரன்
பொய்யென்றவசனம்
நாவுரண்டுரைத்தால்
இந்தரிஷிதபத்தைவிட்டு
நான்நீச்சகுலமாவேன்
(அறுபதியாலொண்ணு)
அரிச்சந்திராஜன்
ஒருபொய்சொல்லாமல்
என்தபத்தில்பாதிபோனு
கானிலைத்து விட்டால்தா
[ரேன்
இவர்களிட்டசபதம்

இந்திரனுங்கேட்டு
தெய்வலோகம்போனர்
வசிஷ்டமாமுனியும்
தபசுக்குநடந்தார்
(எழுபதியாலொண்ணு)
ஏங்கிவிஸ்வாமித்திரன்
தெய்வத்தை தொழுதான்
மன்னனரிச்சந்திரன்
சொர்னதானம்செய்ய
ஜெபகண்டிகைபோட்டார்
தபசிபோலமுனிவன்
அரசனண்டைவந்தான்
(எண்பதியாலொண்ணு)
ஏனையாமுனியே
உன்பாதமேசரணம்
பக்ஷம்வைத்தருள்வீர்
சத்தியரிச்சந்திரா
நான் வேள்வி செய்யபோ
[ரேன்
நீகோடிபொன்தருவாய்
திரவியங்சள்தந்தேன்
எடுத்துக்கொண்டு போங்
உன்வசத்தில்தானே [கள்
ஒருபொழுதிருந்தால்
நாளைவந்துநானும்
எடுத்துக்கொண்டு போ
[ரேன்
(தொண்ணூறுடலொண்
ணு)
துஷ்டன் விஸ்வாமித்திர
சூதுசெய்தயோத்தி [ன்
இட்டதோர்பயிரை
பன்றிகளும்மானும்
மிருகத்தாலழித்தான்
காவல்காக்கும்பேரை
கொசுகளும்கௌவி
கொட்டச் சொல்லி விட்
[டான்
நாட்டுகுடியெல்லாம்
இராசனேடே சொன்னர்
(ஈ-பிள்ளைபாரேவாரி)
பூபனரிச்சந்திரன்
புத்திரனுங்கூட
சத்தியகீர்த்தியும்
சதுருடனேவேட்டை
கானகத்திலுள்ள
கனமிருகமெல்லாம்
வெட்டியேகெலித்தான்
வீரனரிச்சந்திரன்
(ஒருவதியாலொண்ணு)

உடையவளுங்கூட
இரங்கினர்பூங்காவில்
நித்திரையுஞ்செய்து
சொர்ப்பனமுங்கண்டு
தேவியுடன்சொன்னர்
திரும்பினர்யோத்தி
முனிவன்விஸ்வாமித்திரர்
வானபெண்களேயனுப்பி
ஆண்டகுடைகேட்டார்
(இருபதியாலொண்ணு)
இறைபவன்குலத்தோன்
அடித்தான்சவுக்காலே
அடித்தான் விஸ்வாமித்தி
[ரன்
அடித்தாபேயுந்தன்
முடிதனிலுதைப்பேன்
அய்யனேசரணம்
மெய்யனேயுன்பாதம்
கிரீடங்கள்பட்டு
கொப்பளித்துப்போமே
(முப்பதியாலொண்ணு)
முனியோரேசரணம்
குற்றங்கள்பொறுத்து
பக்ஷம்வைத்தருள்வீர்
அல்லவென்றல்குற்றம்
அடியேனல்பொறுப்பீர்
பொய்யென்றவசனம்
நாவினலுரையேன்
(நாற்பதியாலொண்ணு)
இந்தநாடுநகர்சேனை
இராச்சியம்போனலும்
பொய்யென்றவசனம்
கினவிலுமுறையேன்
நீ அப்படியேதாகும்
அரசனரிச்சந்திரதீரா
சொல்குற்றமுண்டோ
சுவாமிவிஸ்வாமித்திரா
நீ இல்லையென்றுசொல்லு
இதுசத்தியந்தானையா
நான் தாரைவார்த்து விட்
[டேன்
(ஐம்பதியாலொண்ணு)
அடியேன்யுன்வசத்தில்
நான்வைத்த பொன்னைதா
[ரும்
முத்திரைகுலையாமல்
இருக்குதந்தபொன்னும்
நான் தாரைவார்த்துவிட்
[ட
தனங்களென்னதாமோ

நீ அப்படியேதாரும்
அரசனரிச்சந்திரா
ஆரெட்டுக்கிடுவில்
நக்ஷத்திரகன்கையில்
செலித்திவிடும்பிள்ளாய்
(அறுபதியாலொண்ணு)
அரிச்சந்திரராஜன்
கௌசிகனுர்கையில
பாரகடன்பட்டு
பரதேசியாகி
பிரதேசம்போரேன்
காசிதேசம்போரேன்
இந்தகடன்தீர
நக்ஷத்திரகன்கையில்
சிக்கினேன்சிவனே
(எழுபதியாலொண்ணு)
இதற்கென்ன செய்வோ
[மென்று
யேங்கிஅரிச்சந்திரன்
தாரேனென்றுசொல்லி
கூடவாருமென்றான்
பசிக்குதுயெனக்கு
நீசோறுபோடுயென்றான்
இந்தகானகத்தில்சோறு
தேடினல்வருமோ

(எண்பதியாலொண்ணு)
எட்டியேஅடித்தான்
கையில்கிட்டிகளைகட்டி
பொன்குடுத்தால்தாரும்
ஒருபொய்யாகிலும்சொல்
[லும்
அண்ணுந்தாளைபோட்டு
அடித்தால்நானென் செய்
அடிதனைநிறுத்தி [வேன்
தனையெடுக்கச் சொன்ன
[ன்
(தொண்ணூருட லொண்
ணு)
தோளிலேயெடுத்து
காசிக்கிநடந்தான்
உன்னைநானெடுக்க
என்னைவேதாளமரிக்க
வெட்டினேன்வாளால்
கிட்டவரவொட்டாமல்
அக்கினிமரிக்க
அவித்தாள்சந்திரமதி
அதற்கப்பரமேபோனர்
(உா பிள்ளையாரேவாரி)
பூபனரிச்சந்திரன்
காசிதீர்த்தங்கண்டான்

ஸ்தானங்களைசெய்தார்
தலங்களைப்பார்த்தார்
இடந்தனில்கெருடன்
எதிர்வரக்கண்டார்
நரையான்வலமாக
நன்மையாச்சுதென்றார்
(ஒருவதியாலொண்ணு)
உலகமாளும்இராசன்
உத்தமியுங்கூட
சத்தியகீர்த்தியும்
புத்திரனுங்கூட
வீகமாக்கனியும்
முல்லையிருவாக்ஷி
அன்னங்கள்மயில்கள்
ஆடும்பூங்காவனம்
காசிவிஸ்வநாதா
பாதமோநான்கண்டேன்
(இருபதியாலொண்ணு)
ஈஸ்வரன்மகனே
விக்கினரேதெண்டம்
நந்திகேஸ்வரரே
விஸ்வநாதரேசரணம்
சத்தியந்தப்பாமல்
தவமுனிவறுணத்தை
நீவெற்றியாயளிப்பாய்
விஸ்வநாதரே தொழுதே
[ன்
(முப்பதியாலொண்ணு)
முடிபொறுத்தமன்னன்
அடியேனைத்தொழுதாய்
அல்லல்விட்டுநீயும்
அரசாளுவாய்பின்பு
அவர்வாக்குகேட்டு
வீதிஅலங்காரம் பார்த்து
காசிபட்டணத்தில்
உன்மனைவியைவிற்று
நீபொன்னைத்தருவாயே
(நாற்பதியாலொண்ணு)
நாடுநகர்தோற்று
நக்ஷத்திரகன்கையில்
அடிபட்டுநான்நொந்தேன்
காசிவிஸ்வநாதரே
இந்தவீதினில் பெண்ணை
வித்துதரவேணும்
அன்னைநானிருக்க
என்னைநீரும்வித்து
அந்தரிஷிகடனைதீரும்
(ஐம்பதியாலொண்ணு)
அன்னைச்சந்திரமதியே
கொள்ளுவாருமுண்டோ

அக்கினிபகவான்
அந்தணரைப்போலே
வந்தடிமைக்கொண்டான்
ஏந்திழையாள்பாலன்
மாங்குயிலைப்போலே
மறையவன்பின்போனார்
(அறுபதியாலொண்ணு)
அன்னையைநான்விற்று
சொன்னதோர்கடனை
செலுத்திவிட்டேனையா
நீதந்தபொருளெல்லாம்
தாருபணமாச்சு
தவமுனிறுணத்தை
தாருமரிச்சந்திரா
யென்னையேநான்விற்று
ரிஷிருணத்தைதாரேன்
(எழுபதியாலொண்ணு)
என்னை கொள்ளுவாருமு
[ண்டோ
பின்னுங்காசிதன்னில்
பூபன்எமராஜன்
புலையனாகவந்து
அடிமையாகக்கொண்டான்
நீசொன்னபொருள்தந்து
சுவாமிகக்ஷத்ரய்யா

ஒரு பொய்சொல்ல மாட்
[டாமல்
என் பெண்டுபிள்ளைவிற்
[றேன்
நான்புலையனுக் கமைந்தே
[ன்
(எண்பதியாலொண்ணு)
என்னசெய்வேனையா
கன்றைநானறுத்தேன்
சையறுத்துக்கொண்டேன்
வீரபாகன்வந்து
தாருமாறென்றேசி
மயானத்திலிருந்து
பிணஞ்சுடுபணமும்
முழத்துணியனுப்பி
வாய்க்கரிசிதின்று
நீகாத்திரும்வென்றான்
(தொண்ணூருடலொண்
[ணு
அவன்சொற்படிதவறேன்
அவனப்படியிருக்க
மறையவனும்சந்திர
மதிதனையழைத்து
திதிவருகுதென்று
ஊர்பிள்ளைகளும்போனார்

உன்பிள்ளையுங்கூட
தெற்பையும்மிலையும்
பரித்துவரச்சொல்லி
அனுப்படிநீசந்தி
(கா-பிள்ளையாரேவாரி)
பிள்ளையைபனுப்பி
வனத்துக்கவர்போக
வழிசயனம்பார்த்தாள்
இடந்தனில்நரையான்
எதிர்வரக்கண்டாள்
வலந்தனில்கெருடன்
வருகுதேமகனே
ஆகாதசயனம்
ஆகுதேமகனே
(ஒருவதியாலொண்ணு)
உன்னைநானனுப்பி
நான்என்னமாயிருப்பேன்
நீசெடியில் நுழையாமல்
கடிகிவருவாயே
காட்டிலவரோடி
காரெலைபிரண்டை
காய்கரியிலைகள்
நேராகப்பரித்தார்
லோகிதனைக்காணோம்
(இருபதியாலொண்ணு)

அவனெங்கேயென்று தே
[டி
வழியில்கண்டவரை கேட்
[டாள்
தெற்பையும்பரித்தான்
தீண்டிற்றேஅரவம்
நல்லதென்றுசொல்லி
நடந்தோடிவந்து
சந்திரமதிக்கி
வந்துசேதிசொன்னார்
(முப்பதியாலொண்ணு)
முனிவன்விஸ்வாமித்திரர்
சதியென்றறியேனே
இதற்கென்னசெய்வேனென்
[று
அவள்ஏங்கியேபுலம்பி
மறையவனைக்கேட்டாள்
நீவீட்டுவேலைசெய்து
பார்த்துவாடியென்றார்
அவளப்படியேசெய்து
அழுதவள்புலம்ப
போவென்றவர் சொன்னார்
(நாற்பதியாலொண்ணு)
நடந்தாள்புலம்பி
நாடுவிட்டுக்காடு

வனத்தில்கண்டபேரை
வழிகேட்டுப்போனுள்
அருமைமகனுன
லோகிதனைக்கண்டாள்
உந்திவுண்ணச்செ ல்வி
சந்தியும்புலம்ப
(ஐம்பதியாலொண்ணு)
அப்பனேமகனே
ஆருயிர்புதல்வா
என்மகனேவாடா
எழுந்திருடாவென்று
ஏந்துகொங்கைமேலே
தாங்கிஅணைந்தாளே
தகப்பனைப்பிரிந்தாய்
வனத்திலேயிரந்தாய்
(அறுபதியாலொண்ணு)
ஆரோயிவர்பிள்ளை
வேரேயெனக்குண்டோ
பஞ்சணைமெத்தைமேல்
படுக்கெண்ணுபடுக்காய்
கொஞ்சித்தழைமேலே
கூசாமல்படுத்தாய்
கௌசிகமுனியால்
வீடுஞடிழந்தோம்
(எழுபதியாலொண்ணு)

என்னைப்பணிந்தோரை
நான்பணியலாச்சே
மறையவர்க்கடிமை
மகனேவிலைபட்டோம்
காட்டிலேஅரவம்
கடித்துதேமகனே
தந்தைதாய்மறந்தேன்
வந்துகானமுதேன்
(எண்பதியாலொண்ணு)
ஏந்துகொங்கைபாலை
நீசாந்துவுண்ணவாராய்
பொன்னினுல்தீபிட்டி
பிடிப்பார்கள்தாதி
மின்னியநிமலி
பூச்சிவிளக்காச்சே
பெற்றுநான்வளர்த்து
பூமிக்கிரையிட்டேன்
பொன்னனமேனி [ய்
மண்ணின்மேல் புரண்டா
(தொண்ணூருடலொண்
[ணு)
துன்னும்விஸ்வாமித்திர
நானென்னசெய்வேனையா
எனக்குரிமைசெய்வாய்
என்றுநானிருந்தேன்

உன்னுயிரைப்போக்கி
உனக்கு துரிமைசெய்வே [ன்
பிள்ளையில்லாப்பாவி
பெருமலடியானேன்
விதிவசமிதுவோ
விஸ்வாமித்திரன்மாய்கைச்
(சா-பிள்ளையாரேவாரி)
பிள்ளையையெடுத்து
புலம்பியேநடந்தாள்
இது முன்செய்த வினை
செந்தணலடைக்க [யோ
வந்தேனேமகனே
சுடலையிலிருந்து
புலையனும்யெழுந்தான்
(ஒருவதியாலொண்ணு)
ஓடியவன்வந்து
ஆரடிநீயென்றான
என்மைந்தனுமிரந்தான்
தணல்மூட்டவந்தேன்
கூலிகாசிதந்து
நீமூட்டடிதணலை
வகையில்லையென்றாள்
மங்கிலியங்கேட்டான்
வானவர்முனிவர்
மகாதேவருங்காணார்

(இருபதியாலொண்ணு)
என்னுடையதாலி
இந்த நீச்சன் கண்டானே
என்னிட்புருஷன் [யா
காண்பதேயல்லாமல்
ஆரனபனைறெந்து
அழுதவன்புலம்ப
நாவிலுரந்தாலி
காணவுமெண்ணுதே
ஒரு பொய்சொல்லமாட் [டாமல்
போனுனேமகன்தான்
(முப்பதியாலொண்ணு)
முன்செய்தவினையோ
மன்னவன்மகனே
என்றவள்புலம்ப
மதிதயன்மகளும்
இவர்மன்னனென்றறிந்து
மயானங்காற்கவந்த
வகையெனக்குசொல்லு
(நாற்பதியாலொண்ணு)
என்னுயகியைவிற்று
நற்பொருள்தாரகு
சம்பலமாச்சென்றூர்
என்னையேநான்விற்று

ரிஷிறுணத்தைதந்தேன்
செத்தமாடுரித்தேன்
இந்தசுடலைதன்னைக்காத் [தேன்
(ஐம்பதியாலொண்ணு)
அசத்தியம்வாராமல்
காப்பனாருந்தந்தால்
தசனஞ்செய்து வைப்பே [ன்
அழுதுமெள்ளபோயி
மரையவனைக்கேட்டாள்
செதியில்லையென்றான்
தக்கன்விஸ்வாமித்திரன்
காசிமகாராசன்
பாலனைபுரித்து
(அறுபதியாலொண்ணு)
அழுதவள்வரச்சே
வழியினிலேபோட்டான்
அவள்ஏங்கியேபுலம்பி
தாங்கியேயெடுத்தாள்
தன்மைந்தனைக்காணாமல்
மதவல்லியும்புலம்ப
காசிமகாராசன்
அந்தகள்ளரைபிடிக்க
தூதர்களைவிட்டான்
(எழுபதியாலொண்ணு)
ஏந்திழையைக்கேட்டு
ராசன்முன்னேவிட்டார்
அவள் வாக்குகளை கேட் [டார்
குழந்தைகையிலிருக்க
நானில்லையென்றால் போ [மோ
மயானங்கொண்டுநீங்கள்
வீரபாகன்கையால்
சிரந்துணித்துவாரும்
(எண்பதியாலொண்ணு)
ஏந்திழையைவெட்டி
சேதியையனுப்பும்
சந்திரமதியை
தலைகுனியச்சொல்லி
சந்திரவாளாலே
தாங்கியவன்யோங்க
வானவருந்தேவர்
வந்துகைபிடிக்க
எந்தன்கைபிடித்த
ஈசனேசரணம்
(தொண்ணூரு— லொண் [ணு)
உன்துன்பமெல்லாம் போ [ச்சே

உன்சீமையுனக்காச்சே
சத்தியம்வுனக்கே
தாணியரிச்சந்திரா
ஒரு பொய்சொல்லமாட்
[டாமல்
பெண்டுபிள்ளைவித்தாய்
நீபுலய னுக்கமுந்தாய்
வாய்க்கரிசிதின்றாய்
இந்த ராச்சியமோயாண்
[டாய்
இந்தநாடுகதையாதோ
ஆனகுரைசோறும்
வாருமரிச்சந்திரா
உன்னைவாங்கினவன்யேம
மாண்டுபோனபிள்ளை [ன்
தலகலென்றெழுந்தான்

ஈஸ்வரனுமம்மன்
இந்திரனும்தேவர்
மாயவனுமம்மன்
வசிட்டமாமுனியும்
அயோத்தியேசென்று
அரிச்சந்திராசனுக்கும்
சந்திரமதிக்கும்
பட்டமேதரித்தார்
யாரெல்லாமளித்தார்
மங்களமேபாடி
வாழ்த்திசேஷையிட்டார்
சோபனமேபாடி
தெய்வலோகம்போனார்
இந்தகதைகேட்டார்
பஞ்சபூதமொன்றாய்
தஞ்சமுடன்வாழ்வார்.

அரிச்சந்திரன் ஏத்தப்பாட்டு

முற்றிற்று.